# 2022-2023ஆம் கல்வி ஆண்டுகளுக்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியலில் விஞ்ஞான இளமாணி பட்டத்திற்கான பல்கலைக்கழக அனுமதிகள்

## இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா பல்கலைக்கழகத்தில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் விஞ்ஞான இளமாணி பட்டப்படிப்பு கற்கைநெறிக்காக மாணவர்களை தெரிவு செய்வதற்கான பொது தகுதிகாண் பரீட்சை

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் விஞ்ஞான இளமாணி பட்டப்படிப்பு கற்கைநெறிக்காக மாணவர்களை அனுமதிப்பதற்காக பொது தகுதிகாண் பரீட்சையை நடாத்துவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது தீர்மானித்துள்ளது. இதற்கமைவாக, மேலேயுள்ள பரீட்சைக்கு தோற்றி சித்தியடைவோர் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் அல்லது வவுனியா பல்கலைக்கழக அனுமதிக்காக பரிசீலிக்கப்படுவர்.

**பின்வரும் பரீட்சை நிலையங்களில் தகுதிகாண் பரீட்சையானது ஆங்கில மொழி மூலத்தில் மாத்திரமே நடைபெறுமென்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.**

| | |
|---|---|
| 01. | மிஹிந்தலை |
| 02. | வவுனியா |
| 03. | யாழ்ப்பாணம் |
| 04. | குருநாகல் |
| 05. | கண்டி |
| 06. | கொழும்பு |
| 07. | பதுளை |
| 08. | மாத்தறை |
| 09. | மட்டக்களப்பு |

**தகுதிகாண் பரீட்சைக்கான தகுதித்தன்மை:**

பல்கலைக்கழக அனுமதிகளுக்கான ஆகக்குறைந்த தேவைப்பாடுகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (99 மற்றும் 100ஆம் பக்கம்) வழங்கப்பட்டுள்ள "Admission to the Undergraduate courses of the Universities in Sri Lanka Academic Year 2022/2023" என்ற கைநூலின் 2.2.8.28ஆம் பிரிவின் (கற்கைநெறி குறியீடு 038) கீழ் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளன.

**விண்ணப்பங்களுக்கான நடைமுறை**

1. விண்ணப்பதாரர்கள் 2023 செப்டெம்பர் 22ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் Google form link ஊடாக தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
   **https://forms.gle/BnfiXACdMOXGmDFs6**
2. விண்ணப்பதாரர்கள் பின்வரும் எந்தவொரு வங்கிக் கணக்கிற்கும் 1500.00 ரூபா தகுதிகாண் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

| | வங்கி | | கணக்கிலக்கம் |
|---|---|---|---|
| i. | மக்கள் வங்கி | - | 008-1-001-8-1725841 (அநுராதபுரம்) |
| ii. | இலங்கை வங்கி | - | 86017144 (மிஹிந்தலை) |

   பணக்கொடுப்பனவின் பற்றுச்சீட்டின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும் என்பதை விண்ணப்பதாரர்கள் கவனத்திற் கொள்ளவும்.
3. பின்வரும் சான்றிதழ்களை இணைக்குமாறு விண்ணப்பதாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
   i. க.பொ.த உயர்தரச் சான்றிதழ்
   ii. க.பொ.த சாதாரணதரச் சான்றிதழ்
   iii. தேசிய அடையாள அட்டை

சான்றிதழ்கள் பாடசாலை அதிபரினால் அல்லது சமாதான நீதவான் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு உத்தியோக முத்திரை பதிக்கப்படல் வேண்டும் என்பதுடன் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

**குறிப்புக்கள்:**

i. விண்ணப்பத்திலுள்ள பெயருக்கும் சான்றிதழ்களிலுள்ள பெயருக்கும் முரண்பாடுகள் ஏதுமிருப்பின் அவைகள் ஒரே நபருடையவையென உறுதிப்படுத்துவதற்காக சத்தியக்கடதாசி ஒன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ii. தகுதிகாண் பரீட்சைக்கான தேவையான அனுமதி தேவைப்பாடுகளை திருப்திப்படுத்தும் அபேட்சகர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும்.

iii. பின்வரும் வகையில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
   (அ) தகுதிகாண் பரீட்சைக்கான ஆகக்குறைந்த அனுமதித் தேவைப்பாடுகளை கொண்டிராத அபேட்சகர்.
   (ஆ) வங்கியொன்றின் பண வைப்புத்துண்டு மற்றும் உரிய முறையில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட க.பொ.த உ/த மற்றும் க.பொ.த சா/த சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு ஆகியவற்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பம்.
   (இ) முழுமையற்ற விண்ணப்பங்கள்.
   (ஈ) முடிவுறுத்தப்படும் திகதிக்கு பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில், அபேட்சகர்களினால் மேற்கொள்ளப்பட்ட பணக்கொடுப்பனவுகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீளளிக்கப்படமாட்டாது.

**தகுதிகாண் பரீட்சைக்கான திகதி:**

2023 ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி. (பி.ப. 2.00 - பி.ப. 4.00)

(பரீட்சை நடைபெறும் தினத்தில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால் அது பற்றி விண்ணப்பதாரருக்கு அறியத்தரப்படும்.)

**மேலதிக தெளிவுறுத்தல்களுக்கு:**

தயவு செய்து பிரவேசிக்கவும்: - http://www.rjt.ac.lk

பிரதி பதிவாளர் (பரீட்சைகள் மற்றும் கல்விசார்) : தொலைபேசி இல. : 025-2266780
மின்னஞ்சல் : it_aptitude@rjt.ac.lk

**பதிவாளர்,**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,**
**மிஹிந்தலை.**